# கலாதீபம்

කලාදීපම්

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.10.2025 | தீபம் 39


# இன்று அக்டோபர் முதலாம் நாள்

# தனது 102 ஆவது அகவையில்

# தடம்பதிக்கிறது கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 102 ஆவது அகவை நிறைவு நாள் 01.10.2025 புதன்கிழமை ஆகிய இன்றாகும்.

அதனை ஒட்டி கலாசாலையில் கோவில் கொண் டிருக்கும் யோகாம்பிகா சமேத யோகலிங்கேஸ்வர் ஆலய த்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம் பெறுகின்றன.

01.10.1923 இல் ஆரம்பிக்கப்பட்ட கோப்பாய் ஆசிரி யர் கலாசாலை - இலங்கையில் இயங்கு நிலை யில் உள்ள மூத்த ஆசிரியர் கலாசாலை என்ற பெருமையுடன் இன்று 102 ஆவது ஆண்டு நிறை வைக் காண்கின்றது. இது தொடர்பான சிறப்பு வைபவமும் இன்று காலை கலாசாலையில் நடை பெறுகின்றது.

கோப்பாயில் ஆசிரியர் கலாசாலை அமைவதற்கான அடித்தளம் இட்ட பெருமை காரைநகர் அருணா சலம் உபாத்தியாயரைச் சாரும். கோப்பாய் பிரதே சத்தில் 1916 இல் அவர் அமைத்த ஆசிரியர் கலாசாலையத் தொடரமுடியாத சூழ்நிலை அவரது இறப்பினால் ஏற்பட்டது. அதன் விளைவாக கோப்பாயைச் சேர்ந்த சைவத்தமிழ்ப் பெரியார்கள் சேர் பொன் இராமநாதனிடம் வேண்டிக்கொண்டதன் அடிப்படையில் அவர் தனது ஐந்து ஏக்கர் நிலப் பரப்பை கலாசாலை அமைவதற்காக வழங்கினார்.

தற்போதைய சூழலில் ஆசிரிய கலாசாலைகள் ஆசிரியர் கல்வி சார்ந்த வேறு தளங்களில் பய ணிக்க வேண்டிய நிறுவனங்களாக அமைந் துள்ளன. ஆசிரியர்களுக்கான பல்கலைக் கழகம் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற சூழலில் - சேவையின் பின்னான பயிற்சியை

வழங்கும் நிறுவனங்களாக அவை உருமாறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனைக் காலம்தான் தீர்மானிக்க வேண்டும்.

இத்தகைய சூழமைவில் வடபுல மண்ணிற்கு சிறப்பாகவும் நாடு முழுவதற்கும் பொதுவாகவும் ஆசிரியரர் கல்வியை வழங்கி இன்று 102 ஆவது ஆண்டு நிறைவைக் காணும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையை நாமும் வாழ்த்துவோம்.




**01.08.2025 — 30.09.2025 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு**

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவாளர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)


கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.


**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


## பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு அவர்களுக்கு பவளவிழா வாழ்த்துகள்

கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் மற்றும் பிரதி முதல்வர் (1999 - 2010) பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு (SLEAS) அவர்களின் பவள விழா 24.09.2025 இரவு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

யாழ் பல்கலைக்கழக சமூகத்தினர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகத்தினர் தீவக மண்ணின் மைந்தர்கள் எனப்பலர் கலந்து சிறப்பித்தனர்

யாழ் பல்கலைக்கழக சமூகத்தின் சார்பில் முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை பேராசிரியர் என் சண்முகலிங்கன் மற்றும் பேராசிரியர் குகபாலன் பேராசிரியர் எஸ் சிவலிங்கராஜா பேராசிரியர் ம. இரகுநாதன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்

கலாசாலை சமூகத்தினர் சார்பில் ஓய்வு நிலை அதிபர் வே.கா. கணபதிப்பிள்ளை மற்றும் ஓய்வு நிலை விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்.






# கலாதீபம்

කලාදීප KALADEEPAM

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

### ஆசிரியத்துவம் – நவீன செல்நெறி

ஆசிரியத்துவம் என்பது மாணவர்களின் அறிவை வளர்த்து, அவர்களை வாழ்விற்கு தயார்செய்யும் மிக உயர்ந்த பணி ஆகும். பாரம்பரிய முறையில் ஆசிரியர் அறிவை வழங்குபவராக மட்டுமே கருதப்பட்டார். ஆனால் நவீன காலத்தில் ஆசிரியர் அறிவை வழங்குவதோடு மட்டுமல்லாமல், மாணவர்களை ஆராய்ச்சியாளராகவும், சிந்திப்பவராகவும், சமூகப் பொறுப்புள்ள குடிமகனாகவும் உருவாக்கும் பொறுப்பு பெற்றுள்ளார்.

இணையம், கணினி, செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்பங்கள் கல்வியமைப்பில் முக்கிய பங்காற்றுகின்றன. அதனால் ஆசிரியர் அறிவை மட்டும் கற்றுத்தருவது போதுமானதல்ல; அறிவைப் பெறும் வழிமுறைகளையும், தகவலை ஆராயும் திறனையும் மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும்.

நவீன செல்நெறி என்றால், மாணவர் மையப்படுத்தப்பட்ட கற்றல், செயல் மூலம் கற்றல், திட்ட வேலைகள், விமர்சன சிந்தனை, சமூகப் பொறுப்பு, மற்றும் வாழ்க்கைத் திறன்களை வளர்த்தல் எனும் கொள்கைகள் அடங்கும். இதில் ஆசிரியர் வழிகாட்டியாக, நண்பனாக, ஊக்குவிப்பவராக செயல்படுகிறார்.

ஆசிரியத்துவம் நவீன செல்நெறியில் மாணவர் முழுமையான மனிதராக வளர வேண்டும் என்பதே இலக்கு. அறிவு, திறன், நற்பண்புகள் ஆகிய அனைத்தையும் இணைத்து உருவாக்கும் பணியில் ஆசிரியர் முக்கிய பங்கு வகிக்கிறார். இதனால் கல்வி ஒரு புத்தக அடிப்படையிலான செயல் மட்டுமல்ல, வாழ்வின் முழுமையான பயிற்சி என விளங்குகிறது.

## கலாசாலையின் விஞ்ஞானத்துறை ஓய்வுநிலை விரிவுரையாளர் வி.எஸ். குணசீலன் அவர்களுக்கு யாழ் விருது

கலாசாலை விஞ்ஞான துறையின் ஓய்வு நிலை விரிவுரையாளர் சின்னத்தம்பி குணசீலன் யாழ் மாநகர சபை சைவ சமய விவகார குழுவால் யாழ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்

இவ்விருது வழங்கும் விழா 06.08.2025 புதன்கிழமை காலை நல்லை ஆதீன கலா மண்டபத்தில் யாழ் மாநகர ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன் தலை மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ் மாநகர மேயர் வி.மதிவதனி விருதை வழங்கி வைத்தார்.

விருது வழங்கும் நிகழ்வில் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் விரிவுரையாளர்களான கு. பாலசண்முகன், வேல்.நந்தகுமார், ஓய்வு நிலை அதிபர் ஆ.ஸ்ரீ.ஸ்கந்தமூர்த்தி, ஓய்வு நிலை விரிவுரையாளர்களான இ.மருதலிங்கம், மு.ஜெயக்குமாரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

யாழ் மண்ணின் உயரிய விருதாகக் கணிக்கப்படும் இந்த விருதை பெற்றுக்கொண்ட கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளருக்கு பலரும் தமது வாழ்த்துக்களை தெரிவித்தனர்

வி.எஸ். குணசீலன் கலாசாலையில் இருந்து 2017 ஆம் ஆண்டில் இளைப்பாறுகை பெற்றிருந்தாலும் தற்போதும் கலாசாலை நடவடிக்கைகளில் தன்னாலான பங்களிப்புக்களை நல்கி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது



# News in Brief - Month of September

**04.09.2025**
**Assembly**
**International Literacy Day**

International Literacy Day was held under the chairmanship of the Principal of the College, S Laleesan.

Ms Vigneswari Kandasamy Iyer, a former lecturer of our college and recently retired from the National College of Education, Jaffna participated as the guest speaker at the event.

The event was hosted by 2nd year Special Education Course Teacher student Mohamed Fatima Murshitha

Mrs S.Kamalini, 2nd year Christian Teacher Student, gave a student speech on the topic of the importance of literacy.

Ms Vigneswari Kandasamy Iyer was honored by the college management board.

**10.09.2025**
**Assembly**
**Bharathiyar Memorial Speech**

The event was held on Wednesday morning, at Rathilashmi Hall under the chairmanship of Principal. Bishop Emeritus of Church of South India Rt.Rev. S.Jebanesan graced the occasion as guest of honor.

The event was hosted by 1st year Teacher Student Thangarasa Tharshan.

The introductory speech was delivered by Vel Nanthakumar, lecturer in Tamil.

college management board was honored the guest Speaker.

**17.09.2025**
**Assembly**
**Laughing and sharing**

The Wednesday Assemply was held on at 8.30 am under the chairmanship of the College Principal, The guest speaker was N. Navaraj Counselor , Jaffna MOH.

The event, organized by the 1st year Teacher Students, was moderated by Mrs.Nirojan Kausika. The management board honored the guest.

**01.08.2025**
**Assembly**
**How to win the challenges**

Speech by Dr. S. Sabaesan, Lecturer at the University of Cambridge

Cambridge University Lecturer and Researcher Dr.**Sithamparanathan** Sabesan visited the College and delivered a motivational speech to the College community.

The event was held on Friday, 01.08.2025 at Rathilakshmi Hall under the chairmanship of the Principal S.Laleesan.

**01.10.2025**

## Kopay Teachers' College 102 year Celebration

The college day 102 falls on 01.10.2025 to remark this day a special Pooja will be held at the college Hindu Teample

**Navaraththiri Pooja**

Navarathiri Pooja College Hindu temple started on 22.09.2025

# புதன் வாராந்த ஒன்றுகூடல்
# கேம்பிறிஜ் (Cambridge) பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சி.சபேசன் உரையாற்றினார்

கேம்பிறிஜ் (Cambridge) பல்கலைக்கழக விரிவு ரையாளரும் ஆராச்சியாளருமாகிய கலாநிதி சிதம்பரநாதன் சபேசன் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு வருகை தந்து கலாசாலை சமூ கத்தி னருக்கு ஊக்குவிப்பு உரை (Motivational Speech) ஆற்றினார்.

இந்நிகழ்வு 01.08.2025 வெள்ளிக்கிழமை ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்காக கைக்கொள்ள வேண்டிய நான்கு விடயங்கள் என்ற தொனிப் பொருளில் அவரது உரை அமைந்திருந்தது.

உரை நிகழ்வை விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவர் இ.செந்தூர்ச்செல்வன் முன்னிலைப் படுத்தினார்

பிரதி அதிபர் க.செந்தில்குமரன் நன்றி உரை ஆற்றினார். கலாநிதி சிதம்பரநாதன் சபேசன் புலோப்பளையை பிறப்பிடமாக்க் கொண்டவர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பவற்றில் பயின்று கேம்பிறிஜ் (Cambridge) பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி பொறியியல் கல்வியை மேற்கொண்டு அங்கு விரிவு ரையாளராகவும் ஆராட்சியாளராகவும் செயற்படுகின்றார்.

மின்காந்த அலைகளை கையாண்டு பொருட்களை பின்தொடர்ந்து கண்டறியும் (Track) பொறிமுறையை அவர் கண்டுபிடித்தமைக்காக பிரித்தானியாவின் முடிக்குரிய அரசரால் பாராட்டப்பெற்றவர் என்பது குறிப்பிடதக்கது.







# சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்ட புதன் வாராந்த ஒன்றுகூடல் அதிதிப் பேச்சாளராக ஓய்வுநிலை விரிவுரையாளர் விக்னேஸ்வரி கந்தசாமிஐயர் கலந்து கொண்டு சிறப்பித்தார்

சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்ட ஒன்றுகூடல் நிகழ்வு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 04.09.2025 வியாழன் காலை 8.30 மணிக்கு கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அதிதி பேச்சாளராக கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியிலிருந்து அண்மையில் (23.08.2025) இளைப்பாறுகை பெற்றவருமாகிய விக்னேஸ்வரி கந்தசாமி ஐயர் கலந்துகொண்டார்.

இரண்டாம் வருட விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி மொகமட் பாத்திமா முர்ஷிதா முன்னிலைப்படுத்தினார்.

இரண்டாம் வருட கிறிஸ்தவ நெறி ஆசிரிய மாணவி கமலினி எழுத்தறிவின் முக்கியத்துவம் என்ற தலைப்பில் ஆசிரிய மாணவர் உரை வழங்கினார்.

இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களால் எழுத்தறிவு தினம் தொடர்பான ஆவணக் காணொளி தயாரித்து காட்சிப்படுத்தப்பட்டது. அதிதிக்கான அறிமுக உரையை கலாசாலை அதிபர் ஆற்றினார்.

அவர் தனது உரையில் விக்னேஸ்வரி கந்தசாமி ஐயர் 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டுவரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் சேவையாற்றியதை நினைவு கூர்ந்ததுடன்

அதிதி பேச்சாளர் முகாந்திரம் சதாசிவ ஐயர் வழிவந்தவர் என்பதையும் பெருமையுடன் நினைவு கூர்ந்தார்.

அதிதி உரையை தொடர்ந்து பிரதி அதிபர் (கல்வி) த.கோபாலகிருஷ்ணன் நிறைவுரை ஆற்றினார்.

கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் விக்னேஸ்வரி கந்தசாமி ஐயர் பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.











# புதன் வாராந்த ஒன்றுகூடல்
# பாரதியார் நினைவரங்கம்
## அதிதிப் பேச்சாளராக தென்னிந்திய திருச்சபையின் ஓய்வுநிலை பேராயர் அதி.வண.எஸ் ஜெபநேசன் கலந்து கொண்டு சிறப்பித்தார்

பாரதியார் நினைவரங்கம் 10.09.2025 புதன்கிழமை காலை கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது

இந்நிகழ்வின் அதிதியாக தென்னிந்திய திருச்சபையின் ஓய்வுநிலை பேராயர் அதி.வண.எஸ்.ஜெபநேசன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வை முதலாம் வருட ஆசிரிய மாணவன் தங்கராசா தர்சன் முன்னிலைப்படுத்தினார்.

பாரதியார் கவிதைகள் குறித்த நயவுரைகளை முதலாம் வருட ஆசிரிய மாணவி இனோக் டினேஷ் ஜெயராணி, இரண்டாம் வருட ஆசிரிய மாணவன் இலகுநாதன் செந்தூர்ச்செல்வன் மற்றும் இரண்டாம் வருட ஆசிரிய மாணவி ரவிச்சந்திரன் தேவமணி ஆகியோர் வழங்கினர்.

அதிதி அறிமுக உரையை தமிழ்த்துறை விரிவுரையாளர் கவிஞர் வேல் நந்தகுமார் ஆற்றினார்.

அதிதிக்கான கௌரவத்தினை கலாசாலை முகாமைத்துவ குழுவினர் மேற்கொண்டனர்.

முதலாம் வருட ஆசிரிய மாணவி நிரோசன் கௌசிகா பாரதியார் பற்றிய ஆவணக் காணொளியை தயாரித்து காட்சிப்படுத்தினார்.











# புதன் வாராந்த ஒன்றுகூடல்
# சிரித்தலும் பகிர்தலும்
# அதிதிப் பேச்சாளராக உளவளத்துணையாளர் நா.நவராஜ் கலந்து கொண்டு சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் புதன் ஒன்றுகூடல் 17.09.2025 காலை 8.30 மணிக்கு கலாசாலை அதிபர் திரு.ச. லலீசன் தலைமையில் ரதி லக்ஷ்மி மண்டபத்தில் இடம்பெற்றது.

அதிதி பேச்சாளராக உளவளத்துணையாளர் நா.நவராஜ் கலந்து கொண்டார். முதலாம் வருட ஆசிரிய மாணவர் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வை ஆசிரிய மாணவி திருமதி. நிறோஜன் கௌசிகா நெறிப்படுத்தினார். அத்துடன் ஓசோன் துவாரம் பற்றிய விழிப்புணர்வு காணொளியையும் தயாரித்து காட்சிப்படுத்தினார்.

ஆசிரிய மாணவி அபிலூன் பர்சானா ஓசோன் பாதுகாப்பு என்ற பொருளில் உரை நிகழ்த்தினார். அதிதிக்கான அறிமுக உரையை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. பாலசண்முகன் ஆற்றினார்.

அதிதியாகக் கலந்து கொண்ட உளவளத் துணையாளர் நா.நவராஜ் முகாமைத்துவ குழுவினர் பொன்னாடை போர்த்தியும், மாலை அணிவித்தும் கௌரவித்தனர்.

அதிதி நா.நவராஜ் தனது ஆசிரியர்களான குழந்தை .ம.சண்முகலிங்கம், வித்துவான் ஆ. சபாரத்தினம் ஆகியோர் எழுதிய ஒரு தொகுதி புத்தகங்களை கலாசாலை நூலகத்திற்கு கையளித்தார். இதனை நூலகப் பொறுப்பு விரிவுரையாளர் வே. சேந்தன் பெற்றுக்கொண்டார்.











# பாராட்டி வாழ்த்துகிறோம்

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை உத்தியோகத்தர்கள் மூவர் SLTES I ற்கு பதவியுயர்வு பெற்றுள்ளனர். அவர்களுடைய பணிக்காலம் சிறப்புற அமைய கலாசாலை சமூகத்தின் சார்பில் வாழ்த்துகிறோம்



கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
SLTES I
பிரதி அதிபர்
நிதி, நிர்வாகம்,
தலைவர் (விரிவுரையாளர் கழகம்)



பொன்னுத்துரை சற்குணநாதன்
SLTES I
மாணவர் மன்றக் காப்பாளர்



சிவலோசனி சுரேந்திரன்
SLTES I
மாணவர் மன்றக் காப்பாளர்

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை உத்தியோகத்தர்கள் ஐவர் SLTES II ற்கு பதவி உயர்வு பெற்றுள்ளனர். அவர்களுடைய பணிக்காலம் சிறப்புற அமைய கலாசாலை சமூகத்தின் சார்பில் வாழ்த்துகிறோம்.

1. சின்னையா மனோகரன் (SLTES II)
2. வயித்திலிங்கம் வசந்தி (SLTES II)
3. இராசநாதன் இராசபாலன் (SLTES II)
4. மாலதி பத்மநாதன் (SLTES II)
5. தர்ஷினி முத்துராஜா (SLTES II)

**கற்றல் ~ கற்பித்தல் செயற்பாட்டின் பொருட்டு ஏழு விரிவுரையாளர்கள் (SLTES) கலாசாலையில் இணைக்கப்பட்டுள்ளனர்**

1. கார்த்திகேசன் கமலநாதன் - வரலாறு
2. அருணாசலம் சேந்தன் - தொழிற்கல்வி
3. வரதராசா வித்தியாபரன் - சித்திரம்
4. நந்தினி சத்தியரூபன் - சித்திரம்
5. தர்மினி நாகசெல்வம் - நடனம்
6. மரியதாஸ் பத்மராஜா - ஆரம்பக்கல்வி
7. ஜேசுதாசன் பாலகுமார் - கிறீஸ்தவம்

# நவராத்திரி

கலாசாலையில் அமைந்திருக்கும் யோகாம்பிகா சமேத யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் 22.09.2025 தொடக்கம் நவராத்திரி விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

02.10.2025 வியாழன் காலை 9 மணிக்கு ஏடு தொடக்கும் நிகழ்வு இடம்பெறும்

இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந் நிகழ்வில் கலாசாலை அதிபர் ஏடு தொடக்குவார்



# துயர் பகிர்கிறோம்

எமது கலாசாலையின் சிரேஸ்ட விரிவுரையாளர் சின்னையா மனோகரன் அவர்களின் அன்புத்தாயார் அமரர் சின்னையா பொன்னம்மா
(தோற்றம் 05.04.1933 - மறைவு 24.09.2025)
அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கிறோம்



# பவளவிழாக் கண்ட பெருந்தகை பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு

தீவக மண்ணின் மைந்தர் - கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் மேனாள் பிரதி முதல்வர் பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு 24.09.2025 (புதன்) இல் அகவை 75 எய்தி பவள விழாவைக் கண்டார்.

கலாசாலை சமூகத்தினர் பலர் நேரில் கலந்து கொண்டு வாழ்த்தினர்

தீவகத்தின் அல்லைப்பிட்டிக் கிராமத்தில் செல்லையா - இலட்சுமி தம்பதிகளின் மூத்த மகனாக 24.09.1950 இல் பிறந்தவர் இவர். அனலைதீவைச் சேர்ந்த விஜயலட்சுமியைத் திருமணம் செய்து தற்போது நல்லூரில் பண்டாரிக்குளம் ஒழுங்கையில் அமைதியாக வாழ்ந்து வருகின்றார். கலாசாலை ஊடாக நாடு முழுவதற்குமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட நற்றமிழ் ஆசிரியர்களை வழிப்படுத்திய பெருமை அவருக்குரியது.

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் படிக்கும் காலத்தில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர். தொடர்ந்து வேலணை மத்திய கல்லூரியில் சாதாரணதரத்தில் விஞ்ஞானப்பிரிவில் கற்று சித்தியடைந்தார்.

தனது 18 ஆவது வயதில் வாழ்வாதாரத்திற்காக சிறு சிறு தொழில்களை மேற்கொண்டார். அதில் குறிப்பாக இலங்கை போக்குவரத்துச் சபையில் நடத்துநராகப் பணி புரிந்தார். அப்போதெல்லாம் உயர்தரக் கலைப்பாடங்களுக்குரிய புத்தகங்களைப் படித்தபடிதான் பஸ் நடத்துநர் பணியை மேற்கொண்டாராம். இந்நிலையில் சுயமாகவே கற்று கலைப்பிரிவில் உயர்தரப் பரீட்சை எழுதிச் சித்தியடைந்தார்.

1984 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டதாரியாகி 1985 இல் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்றார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1999 இல் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இணைக்கப்பட்ட விரிவுரையாளரானார். 2000 ஆம் ஆண்டு இலங்கை கல்வி நிர்வாக சேவையில் உள்வாங்கப்பட்டார். 60 ஆவது அகவையில் 2010 இல் சேவையில் இருந்து இளைப்பாறுகை பெற்றாலும் தொடர்ந்து வருகை விரிவுரையாளராக ஆசிரியர் கலாசாலை, தேசிய கல்வி நிறுவக டிப்ளோமா கற்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழில் முதுமாணி கற்கை நெறிகளில் சேவை நல்கினார்.

டானியலின் எழுத்துகள் குறித்து ஆராய்ச்சி மேற்கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். மரபார்ந்த இலக்கியங்களிலும் நவீன இலக்கியங்களிலும் தேர்ச்சி மிக்கவர். இலங்கை சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றுக்கொண்டது.



இதனால் தமிழ்ப்பண்டிதர் பட்டத்தையும் பரீட்சைக்குத் தோற்றிப் பெற்றுக் கொண்டார்.

உடுமலை நாராயண கவியின் திரையிசைப் பாடல்களில் ஆழ்ந்த தேடல் மிக்கவர். இதனால் உடுமலை தந்த கவிமலை என்ற ஆராய்ச்சி நூலை எழுதி அதனைத் தமிழகத்தில் வெளியீடு செய்தார். தமிழ் வளர்த்த தீவகச் சான்றோர்கள் என்ற 1300 பக்கங்கள் கொண்ட நூல் அவரது மிகப்பெரிய தேடலின் வெளிப்பாடு. தீவக மண்ணிற்கு அவர் செய்த மிகப்பெரிய ஆவணமாக்கற்சேவை இந்நூலாக்கம் என்றால் மிகைப்படாது. இந்நூல் வடமாகாண பரிசையும்

இதுவரை 24 நூல்களை அவர் ஆக்கியுள்ளார். இதில் ஐந்து பாடநூல்கள் ஆகும்.. ஏனையவை பெரும்பாலும் ஆய்வு சார்ந்த படைப்புகள். இந்நூல்களில் பல விருதுகளைப் பெற்றுள்ளன.

இவரது 24 ஆவது நூல் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டைக் கௌரவிக்கும் வகையில் வடக்கின் ஆசிரியர் கலாசாலைகள் என்ற பொருளில் அமைந்தது. இதனை 2023 இல் வரலாற்று நூலாக வெளியீடு செய்தார்.

தான் உயர்ந்ததோடல்லாமல் மற்றையவர்களையும் உயர்த்திப் பார்ப்பதில் அலாதிப்பிரியம் கொண்டவர். 2009 இல் நான் கலாசாலையில் கால் பதித்தபோது என்னை வரவேற்று அங்கீகாரம் தந்தார். தான் பொறுப்பாக இருந்த தமிழ்த்துறைப் பொறுப்பையும் எனக்கு வழங்கி ஆசீர்வதித்தார். இத்தகைய மனப்பாங்கு இலகுவில் எல்லோருக்கும் அமைந்துவிடுவதில்லை.

இன்றும் நடமாடும் பல்கலைக்கழகமாகத் திகழும் பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு அவர்கள் தனது உடல் இயலாமை காரணமாக பொது வைபவங்களில் பங்கேற்பதைத் தவிர்த்து வந்தாலும் அவர் எம்முடன் இருக்கிறார் என்ப தொன்றே எமக்குரிய அறிவுசார் பலமாகும். உடல் உள ஆரோக்கியத்துடன் அவர் நீண்ட காலம் எமது பலமாக வாழ வாழ்த்துகின்றோம்.

**கலாசாலைச் சமூகம் சார்பில்**
**சந்திரமௌலீசன் லலீசன்**

இப்பத்திரிகை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஊடகமன்றத்தினால் 01.10.2025 அன்று மின்னிதழாக வெளியீடு செய்யப்பட்டது